දුරකථන අංකය/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister } 2784832 / 2784807 / 2785617

ලේකම් / செயலாளர் / Secretary } 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office } 2785141-50 / Fax: 2784846

විද්‍යුත් තැපැල්/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ......................................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

"ඉසුරුපාය", ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල

"இசுருபாயா" ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte
Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. } ED 1/21/1/1/1

දිනය / திகதி / Date } 2009.12.21

சுற்று நிருப இலக்கம் - 2009/42

சகல கல்வி செயலாளர்கள்
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும்
சகல அதிபர்களுக்கும்

**பாடசாலைப் பிள்ளைகளுக்கென நடைமுறைப்படுத்துகின்ற போஷாக்கு நிகழ்ச்சித்திட்டங்கள் - 2010**

கல்வி அமைச்சின் கீழ் நேரடியாக நடைமுறைப்படுத்துகின்ற "பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கல் நிகழ்ச்சித்திட்டம்" மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான அமைச்சு மற்றும் உலக உணவு வேலைத் திட்டத்தின் ஒத்துழைப்புடன் செயற்படுத்தப்படுகின்ற "பாடசாலை மாணவர்களுக்கு காலையுணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்" என்ற போஷாக்கு நிகழ்ச்சித்திட்டங்கள் இரண்டும் இந்த சுற்று நிருபத்தினால் தழுவப்படுகின்றது.

இந் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் இதற்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள 2009/01 இலக்கமுடைய 2009/01/01 ஆந் திகதிய சுற்றுநிருபம் மற்றும் 2009/01/01 இலக்கமுடைய 2009/07/13 ஆந் திகதிய சுற்றுநிருபம் ஆகிய இரண்டும் செல்லுபடியற்றதாகுவதுடன், இதன்பிறகு இந்த சுற்றுநிருபமே செல்லுபடியாகும். இந்தப் போஷாக்குத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் செயற்பாடு 2010 ஜனவரி 11 ஆந் திகதி முதல் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பதுடன், அது தொடர்பாக கீழே குறிப்பிடப்படுகின்ற வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

"ஆரோக்கியமான உற்சாகமான பிள்ளைப் பரம்பரை ஒன்று" என்பதே இந் நிகழ்ச்சித்திட்டங்களின் கருப்பொருள் ஆகும். அத்துடன், மாணவர்களுக்கிடையிலான போஷாக்கு பிரச்சினைகளைக் குறைத்தல், நாளாந்த பாடசாலை வரவினை அதிகரித்தல், சிறந்த உணவுப் பழக்கம் மற்றும் சுகாதார வழக்கங்களை மேம்படுத்தல் மற்றும் தேசிய உணவு கலாச்சாரம் ஒன்றினை கட்டியெழுப்புவதன் மூலமாக நாட்டுக்கு பயன்மிகு நபர் ஒருவரை உருவாக்குதல் என்பன அவற்றின் இலக்குகளாகக் கருதப்படுகின்றன. பாடசாலைகளில் செயற்படுத்தப்படுகின்ற எந்தவொரு போஷாக்கு நிகழ்ச்சித்திட்டமும் இவ் இலக்குகளை அடைந்துகொள்வதற்காகவென அமைந்திருத்தல் வேண்டும்.

இந்நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் கீழே குறிப்பிடப்படுகின்ற வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

1. உணவு வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் பொறுப்பு மாகாண மட்டத்தில், வலய மட்டத்தில், பாடசாலை மட்டத்தில் சுகாதார முன்னேற்றக் குழுக்களுக்கு உரித்தாகும்.

மாகாணக் கல்வி சுகாதார முன்னேற்றக் குழு:

உறுப்பினர்கள் :
- மாகாணக் கல்விச் செயலாளர் (தலைவர்)
- மாகாணச் சுகாதார செயலாளர்
- மாகாணக் கல்விப் பணிப்பாளர்

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்
மாவட்ட செயலாளரின் பிரதிநிதி ஒருவர்
பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர்கள்
தாய் மற்றும் பிள்ளை சுகாதார வைத்திய உத்தியோகத்தர் ஒருவர்
மாகாண சுகாதார நிகழ்ச்சித்திட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்
மாகாணத் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர்
மாகாண போஷாக்கு நிகழ்ச்சித்திட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்
மாகாண ஆரம்பப்பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர்/உதவிக் கல்விப் பணிப்பாளர்
மாகாண விஷேடக் கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் / உதவிக் கல்விப் பணிப்பாளர்
கணக்காளர் (மாகாணக் கல்வித் திணைக்களம்)
மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர்

வலயக் கல்வி சுகாதார முன்னேற்றக் குழு:

உறுப்பினர்கள்:

வலயக் கல்விப் பணிப்பாளர் (தலைவர்)
வலயத்தில் சுகாதார நிகழ்ச்சித்திட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் / உதவிக் கல்விப் பணிப்பாளர்
வலயத்தில் போஷாக்கு நிகழ்ச்சித்திட்டத்துக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் / உதவிக் கல்விப் பணிப்பாளர்
வலயத்தில் விஷேட கல்விக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் / உதவிக் கல்விப் பணிப்பாளர்
தாய் மற்றும் பிள்ளை சுகாதார வைத்திய உத்தியோகத்தர் ஒருவர்
பிரதேச நிர்வாக மக்கள் சுகாதார பரீட்சகர்
நிர்வாக மக்கள் சுகாதார பரீட்சகர்
சுகாதாரக் கல்வி உத்தியோகத்தர்
சுகாதாரக் கல்வி உத்தியோகத்தர்கள் (கல்வி வலயத்துக்குரிய சுகாதார வைத்திய உத்தியோகத்தர் காரியாலயங்களின்)
கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் (வலயத்துக்குரிய கோட்டக் கல்விக் காரியாலயங்களின்)
கணக்காளர் (வலயக் கல்விக் காரியாலயம்)
மாவட்ட சமுர்த்தி முகாமையாளர்கள்
அதிபர்கள் 04 வர்
(1AB பாடசாலைகள் 01, 1C பாடசாலைகள் 01, வகை 2 பாடசாலைகள் 01, வகை 3 பாடசாலைகள் 01)

பாடசாலை சுகாதார முன்னேற்ற ஆலோசனைக் குழு:

குழு உறுப்பினர்கள்:

அதிபர் (தலைவர்)
சுகாதார நிகழ்ச்சித்திட்டத்துக்கு பொறுப்பான பிரதி அதிபர் / பகுதித் தலைவர் / குறித்த ஆசிரியர்கள்
ஆரம்பப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதி அதிபர் / பகுதித் தலைவர்
அதிகபட்சம் மூன்று ஆசிரியர்கள் (ஆசிரியர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப நியமிப்பதற்கு அதிபருக்கு சந்தர்ப்பம் காணப்படுகின்றது)
(சுகாதார மற்றும்உடற்கல்வி / வாழ்க்கைத் திறன் / விஞ்ஞான ஆசிரியர்கள் மிகவும் பொருத்தமானவர்கள்)
மாணவ பிரதிநிதிகள் - பாடசாலை சுகாதார கழகங்களின் தலைவர், செயலாளர்கள் மற்றும் பொருளாலர்
பெற்றோர் பிரதிநிதிகள் (அதகபட்சம் ஐவர்)
மக்கள் சுகாதார பரீட்சகர்
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலாளர் காரியாலயத்தில் போஷாக்கு நிகழ்ச்சித்திட்டத்தினை ஒருங்கணைக்கும் உத்தியோகத்தர்
வெளிவாரியாக நல்லெண்ணம் கொண்டோர் (அதிகபட்சம் இருவர்)

உணவு வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு பாடசாலை அபிவிருத்தி சங்கத்துக்கும் பாடசாலைகள் சுகாதார மேம்படுத்தல் ஆலோசனைக் குழுவுக்கும் வழங்கப்படும். பாடசாலையில் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் குறித்த நிபந்தனைகளின் கீழ் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக அதிபர் (பாடசாலை அபிவிருத்தி சங்கம் / பாடசாலை கட்டியெழுப்பல் சங்கத்தின் தலைவர் / பாடசாலைகள் சுகாதார மேம்படுத்தல் குழுவின் தலைவர்) வலயக் கல்விப் பணிப்பாளருடன் உடன்படிக்கை ஒன்றினை கைசாத்திட வேண்டும். அதன் பிரதியொன்றினை பாடசாலையில் வைத்துக் கொள்ள வேண்டுமென்பதுடன் ஏனைய பிரதிகளை கோட்டக் கல்விப் பணிப்பாளருக்கும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் ஒப்படைக்க வேண்டும். (இணைப்பு 1)

2. உணவு வழங்குவதற்காக பாடசாலை மாணவர்களைத் தேர்ந்தெடுத்தல்

2.1 பாடசாலைப் பிள்ளைகளுக்கு உணவு வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் :

- மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 100 ஐ விடக் குறைவாக உள்ள பாடசாலைகளின் சகல மாணவர்களும், கடந்த வருடங்களில் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையாக இருப்பினும், இவ்வருடத்தில் பாடசாலையின் மொத்த எண்ணிக்கை 100 ஐ விடக் கூடுதலாக இருந்தாலும் சகல மாணவர்களுக்கும் உணவு வழங்கப்படல் வேண்டும்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளின் தரம் 1 – 5 மாணவர்கள்
- விஷேட கல்விப் பிரிவுகளின் மாணவர்கள்
- பாடசாலையில் காலை வேளைகளில் வகுப்பு நடத்தப்படுகின்ற எழுத்தறிவு வகுப்புகளின் மாணவர்கள்
- நிகழ்ச்சித்திட்டத்துக்கு பாடசாலை ஒன்றினை சேர்த்துக் கொள்ளல் அல்லது நீக்கி விடுவதற்கான அதிகாரம் மாகாண / வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு காணப்படும்.

2.2 கல்விக்காக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ்:

- தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளின் தரம் 1 முதல் 13 வரையான மாணவர்கள்

3. உணவு வழங்கல்

3.1 பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கல் நிகழ்ச்சித்திட்டம் :

உணவு வழங்குவது தொடர்பான பொறுப்பு, பாடசாலை அபிவிருத்திச் சங்கம் / பாடசாலையைக் கட்டியெழுப்பல் சங்கம் மற்றும் பாடசாலை சுகாதார மேம்பாடு ஆலோசனைக் குழுவுக்கு வழங்கப்படும். உணவு வழங்குவதற்காக சமூர்த்தி பெறுநர்கள் அல்லது மாணவர்களின் பெற்றோர்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். உணவு வழங்குநர்கள் அவற்றை வழங்குவதற்கு முன்னர் அதிபருடன் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுக் கொள்ள வேண்டும். உணவுப் பொருட்களை வழங்குநர்கள் ஒருவரை விட கூடுதலாக இருக்கும் சந்தர்ப்பங்களில் வெவ்வேறாக உடன்படிக்கைகள் கைச்சாத்திட்டுக் கொள்ளல் வேண்டும். அவ்வாறான உடன்படிக்கை / உடன்படிக்கைகள் மக்கள் சுகாதார பரீட்சகர் மற்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆகிய இருவரினதும் சிபார்சினைப் பெற்றதன் பின்னர் வலயக் கல்விப் பணிப்பாளர் மூலம் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதன் ஒரு பிரதியை பாடசாலையில் வைத்துக் கொள்ள வேண்டும். அத்துடன் ஏனைய பிரதிகளை கோட்டக் கல்விப் பணிப்பாளருக்கும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் ஒப்படைக்க வேண்டும். (இணைப்பு 2)

உணவு வழங்குநர்கள் உணவு வழங்குவதனை நிராகரித்தால் வலயக் குழு அது தொடர்பாக வழிமுறையொன்றினைக் கையாள வேண்டும். உணவு வழங்குவதற்கு சமூர்த்தி உதவி பெறுநர்கள் அல்லது பெற்றோர் முன்வராத சந்தர்ப்பங்களில் குழுவின் சிபார்சுக்கு அமைவாக ஏனைய வழிமுறைகளைப் பயன்படுத்தலாம்.

ஒரு வழங்குநரால் உணவு வழங்கப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை சரிசமமான இரு வகுப்புக்கள் அல்லது மாணவர்களின் அதிகபட்சமான தொகை 80 க்கு வரையறுத்துக் கொள்ள வேண்டும். சிறிய பாடசாலையொன்று தொடர்பாக வலயக் குழுவுக்கு தீர்மானம் எடுக்கும் அதிகாரம் வழங்கப்படும்.

3.2 கல்விக்காக உணவு நிகழ்ச்சித்திட்டம்

உணவுப் பொருட்களை மாவட்ட செயலகத்தின் மூலம் பெற்றுக்கொள்ளல், அவற்றை சிறந்த முறையில் பாவித்தல், தரமான நிலையில் உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பன பாடசாலை அபிவிருத்திச் சங்கம் / பாடசாலையைக் கட்டியெழுப்பல் சங்கம் மற்றும் சுகாதார மேம்பாட்டுக் குழுவின் பொறுப்புக்களாகும்.

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரிசி, சீனி, பருப்பு, எண்ணெய் போன்ற உணவுப் பொருட்கள் மாவட்ட செயலாளர் காரியாலயத்தின் மூலம் பாடசாலைகளுக்கு வழங்கப்படும்.

4. உணவு வழங்குகின்ற நேரம்.

இதற்கு காலை 7.30 க்கும் 8.30 க்கும் இடையில் 15 நிமிடங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். அதிகமான மாணவர்கள் காலை உணவு உட்கொள்ளாது வருகைதருவதனாலும், பாடசாலையின் கற்றல் செயற்பாடுகளில் உற்சாகமான பங்கேற்பினை பெற்றுக்கொள்வதனையும் இலக்காகக் கொண்டு இந் நேரம்

தீர்மானிக்கப்பட்டுள்ளது. பாடவிதானத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு இடையூறு ஏற்படாத வகையில் இந்நேரத்தினை ஒதுக்கிக் கொள்வது அதிபரின் பொறுப்பாகும்.

5. வழங்கப்படுகின்ற உணவு வேளைகள்

5.1 பாடசாலை பிள்ளைகளுக்கு உணவு வழங்கல் நிகழ்ச்சித்திட்டம் :

அனைத்து நாட்களுக்கும் குறித்த உணவுப் பட்டியல் காணப்படும் (இணைப்பு 3) என்பதுடன் அதன்படி உணவு வழங்குதல் இடம்பெற வேண்டும். குறித்த உணவுப் பட்டியலை வழங்க முடியாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் பதிலாக வேறு உணவுகளைப் பயன்படுத்தலாம்.

வலயக் கல்வி மட்டத்தில் அல்லது மாகாணக் கல்வி மட்டத்தில் அல்லது குழுவின் தீர்மானத்துக்கேற்ப உணவுப் பட்டியல் தொடர்பாக மாற்றங்களுக்கான யோசனைகள் முன்வைக்கலாம் என்பதுடன் அதற்கு கல்வி அமைச்சின் அனுமதியினைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

தரம் 6 இனைவிட மேல் உள்ள மாணவர்களுக்கு உணவு வழங்கும் போது உணவுப் பட்டியலில் காணப்படுகின்ற அளவினைக் கூட்டுவதற்கு ஆலோசனை வழங்கப்பட வேண்டும்.

5.2 கல்விக்காக உணவு நிகழ்ச்சித்திட்டம்

தேசத்தைக் கட்டியெழுப்பல் அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள உணவுப் பட்டியலுக்கு ஏற்ப உணவு வழங்கப்படல் வேண்டும்.

6. பணம் செலவு செய்தல்

6.1 பாடசாலை பிள்ளைகளுக்கு உணவு வழங்கல் நிகழ்ச்சித்திட்டம் :

ஒரு மாணவனின் ஒரு உணவு வேளைக்காக ரூபா. 20 ஒதுக்கப்படும். மாணவர்களின் நாளாந்த வரவு 100% அல்லது 95% க்கும் கூடுதலாக இருக்கும் சந்தர்ப்பங்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ள அனைத்து மாணவர்களுக்கும் 100% பணத்தையும், மாணவர்களின் வரவு 95% ஐ விடக் குறைவான சந்தர்ப்பங்களில் அங்கீகரிக்கப்பட்ட மாணவர்த் தொகையில் 95% க்கான பணத்தினை செலுத்த வேண்டும்.

ஒவ்வொரு மாதத்தினதும் செலவு விபரங்கள் தொடர்பான ஆவணம் (இணைப்பு 4) மற்றும் வவுசர்கள் அடுத்த மாதத்தின் 5 ஆந் திகதிக்கு முன்னர் அதிபர் மூலமாக வலயக் கல்விக் காரியாலயத்துக்கு ஒப்படைக்கப்படல் இடம்பெற வேண்டும். வலயக் காரியாலயத்தால் அம் மாதம் 10 ஆந் திகதிக்கு முன்னர் உணவு வழங்குநர்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டும். உணவு வழங்குநர்களுக்கு கொடுப்பனவினை வழங்கல் செயற்பாடு அதிபரின் சிபார்சு மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளரின் அங்கீகாரத்தின் படி இடம் பெறவேண்டும்.

6.2 கல்விக்காக உணவு நிகழ்ச்சித்திட்டம்

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாவட்ட செயலாளர் காரியாலயத்தின் மூலம் பாடசாலைகளுக்கு அரிசி, பருப்பு, சீனி, எண்ணெய் போன்ற உணவுப் பொருட்கள் வழங்கப்படுவதுடன் அவை தவிர வேறு உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு ரூபா. 2.00 ஒதுக்கப்படும். உணவு வழங்கப்படும் நாட்களில் நாளாந்த வரவுக்கேற்ப இப் பணம் வழங்கப்படும்.

இது தொடர்பாக தேசத்தைக் கட்டியெழுப்பல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள மாதாந்த பாடசாலை அறிக்கை - (MSR) (இணைப்பு A) மற்றும் பணம் பெற்றுக் கொள்வதற்கான மாதிரிப் படிவத்தினையும் (இணைப்பு B) உரிய முறையில் பூர்த்தி செய்து வவுசர் பத்திரங்கள் மற்றும் விலைப்பட்டியல்களுடன் அடுத்த மாதம் 05 ஆந் திகதிக்கு முன்னர் அதிபர் மூலமாக வலயக் காரியாலயத்துக்கு வழங்கப்பட வேண்டுமென்பதுடன் வலயக் கல்விக் காரியாலயத்தால் 10 ஆந் திகதிக்கு முன்னர் பணம் அனுப்பும் செயற்பாடு இடம்பெற வேண்டும். தயாரிக்கப்பட்ட சாராம்ச அறிக்கை 15 ஆந் திகதிக்கு முன்னர் மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கும் கல்வி அமைச்சின் பாடசாலைகளின் சுகாதாரம் மற்றும் போஷாக்கு கிளைக்கும் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒரு மாதத்துக்கு தேவையான செலவாக அதிகபட்சமாக ரூபா. 20,000 என்ற எல்லையின் கீழ் முற்பணமாக வலயக் கல்விக் காரியாலயத்தின் மூலம் வழங்கப்பட முடியும் என்பதுடன் அதனை பாடசாலை அபிவிருத்திச் சங்கம் / பாடசாலையைக் கட்டியெழுப்பல் சங்கம் கணக்குக்கு வைப்புச் செய்ய வேண்டும். அவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட முற்பணம் நவம்பர் மாதம் முடிவடைவதற்கு முன்னர் சரிப்படுத்தல் செய்யப்படல் வேண்டும்.

7. ஒருங்கிணைப்பு நடவடிக்கையும் அறிக்கை சமர்ப்பித்தலும்.

ஒவ்வொரு மாகாணக் கல்விக் காரியாலயத்துக்கும் மற்றும் வலயக் கல்விக் காரியாலயத்துக்கும் இந் நிகழ்ச்சித்திட்டத்துக்கு பொறுப்பாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் / உதவிக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படல் வேண்டும்.

நிகழ்ச்சித்திட்டத்தினை கண்கானிப்பதற்காக திட்டம் தயாரித்தல், முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடாத்தல் மற்றும் அறிக்கையினைத் தொடர்ந்து பேணிவரல், நிதி முன்னேற்ற அறிக்கையினை தயாரிப்பதற்கு உதவுதல், குறித்த தினத்திற்குள் அறிக்கையினைத் தயாரித்து பொருத்தமான பிரிவுகளுக்கு சமர்ப்பித்தல், நிகழ்ச்சித்திட்டம் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது தொடர்பாக கண்டறிந்து பிரச்சினைகள் ஏதேனும் காணப்படின் அவற்றை நிவர்த்திப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பன இவ் உத்தியோகத்தரின் மூலம் நிறைவேற்றப்படல் வேண்டும்.

குறித்த நேரத்திற்கே பணம் செலுத்துவது தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் நிதி அறிக்கைகளை சமர்ப்பித்தல். மாகாணக் கல்விப் பணிப்பாளர் / வலயக் கல்விப் பணிப்பாளர் / போஷாக்கு நிகழ்ச்சித் திட்டத்துக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் / உதவிக் கல்விப் பணிப்பாளர் / மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கணக்காளர் / வலயக் கல்விக் காரியாலயத்தின் கணக்காளர் ஆகிய உத்தியோகத்தர்களுக்கு ஒரு மாதத்துக்கு ஒரு நாளைக்கு 1/20 கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்ளலாம்.

8. நிகழ்ச்சித் திட்டத்தினை கண்காணித்தலும் மதிப்பிடலும்

பாடசாலை மட்டத்தில்

அதிபர் மற்றும் ஆசிரிய ஆசிரியைகளால் நாளாந்த உணவின் தரம் மற்றும் போதுமான அளவு தொடர்பாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். (இணைப்பு 5)

உணவு வழங்குநர்களின் சுகாதார நிலைமை மற்றும் உணவு தயாரிக்கப்படுகின்ற இடத்தின் சுகாதார நிலைமை தொடர்பாக மக்கள் சுகாதார பரீட்சகர் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இவ் அறிக்கையினை பாடசாலை சுகாதார மேம்பாட்டு குழுவினால் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

ஒவ்வொரு பாடசாலையாலும் நான்கு மாதத்துக்கு ஒரு தடவையாவது மக்கள் சுகாதார பரீட்சகர்களின் உதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இங்கு உணவுகளின் சுகாதார நிலைமை தொடர்பாக அதிபர் மூலம் மக்கள் சுகாதார பரீட்சகரிடமிருந்து அறிக்கை ஒன்றினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன், பாடசாலை மட்டத்தில் தீர்வு காணமுடியாத பிரச்சினைகள் ஏதேனும் இருப்பின் வலயக் காரியாலயத்தின் சுகாதார முன்னேற்ற குழுவின் தலைவருக்கு அறிவிக்க வேண்டும். இங்கு பாடசாலையில் மாணவர்களுக்கு உணவு வழங்கல் மற்றும் உணவு தயாரித்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக கண்டறிய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வலய மட்டம்

வலயக் கல்விப் பணிப்பாளர் / கணக்காளர் / வலயத்தில் ஆரம்பப் பாடத்துக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் / உதவிக் கல்விப் பணிப்பாளர், வலயத்தில் போஷாக்கு நிகழ்ச்சித் திட்டத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் / உதவிக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர்களால் நிறைவேற்றப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கு மேலாக ஆரம்பக் கல்விப் பிரிவு, மனைப் பொருளியல் விஞ்ஞானம், மற்றும் சுகாதார மற்றும் உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர்களின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். குறித்த உத்தியோகத்தர்கள் இல்லாதிருப்பின் வலயக் குழுவின் தீர்மானத்துக்கு ஏற்ப வேறு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்திக் கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தர்களால் கண்காணித்ததன் பின்னர் மாதாந்தம் கண்காணிப்பு அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (இணைப்பு 6) ஒவ்வொரு பாடசாலைத் தவணையிலும் அனைத்துப் பாடசாலைகளும் ஒரு தடவையாவது கண்காணிக்கப்படுகின்ற வகையில் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மாதாந்தம் சுகாதார முன்னேற்றக் குழுவினால் வலயக் கண்காணிப்பு சாராம்ச அறிக்கையாக கல்வி அமைச்சுக்கும் மாகாண சுகாதார முன்னேற்றக் குழுக்களுக்கு வழங்கப்பட வேண்டும். (இணைப்பு 7)

மாகாண மட்டத்தில் -

மாகாணக் கல்விப் பணிப்பாளர் / மாகாணக் கணக்காளர் / மாகாண போஷாக்குக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் / உதவிக் கல்விப் பணிப்பாளர், மாகாண ஆரம்பப் பாடத்துக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் / உதவிக் கல்விப் பணிப்பாளர் மூலம் கண்காணிக்கப்படல் வேண்டும். இணைப்பு 6 க்கு அமைவாக கண்காணிப்பு அறிக்கைத் தயாரிக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு பாடசாலைத்

தவணையிலும் அனைத்து வலயங்களிலும் ஒரு பாடசாலையாவது கண்காணிக்கப்படுகின்ற வகையில் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நிரல் கல்வி அமைச்சு மட்டத்தில்

கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படுவதுடன் இனங்காணப்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பாக வலயக் கல்விக் காரியாலயம் மற்றும் மாகாணக் கல்வித் திணைக்களம் தெரியப்படுத்தப்படும்.

நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக பாடசாலைகள், வலயங்கள் மற்றும் மாகாணங்களுக்குத் தேவைப்படுகின்ற ஆலோசனைகள் / உதவிகளை பாடசாலை சுகாதாரம் மற்றும் போஷாக்கு கிளையினால் பெற்றுக் கொள்ளமுடியும்.

கண்காணித்தலின் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் -

- வழங்கப்படுகின்ற உணவு வேளைகளின் தராதரம்
- தயாரிக்கப்படுகின்ற செயற்பாடு மற்றும் உணவுகளின் சுகாதார தன்மை
- வழங்கப்பட்டுள்ள பட்டியலுக்கு ஏற்ப உணவு வழங்கல்
- போதிமான அளவு
- குறித்த நேரத்திற்கே உணவு வழங்கல்
- நல்ல உணவுப் பழக்கம் மற்றும் சுகாதார வழக்கங்களைப் பின்பற்றல்
- கழிவுகளை அகற்றும் முறை
- எழுத்து மூல ஆவணங்களைப் பேணி வரல்.

கண்காணிப்புக் கொ்டுப்பனவு

பாடசாலை நிகழ்ச்சித்திட்ட கண்காணிப்புக்காக மாகாணக் கல்வித் திணைக்களங்களதும் வலயக் கல்விக் காரியாலயங்களின் குறித்த உத்தியோகத்தர்களுக்கு நிகழ்ச்சித் திட்டத்தினை கண்காணிக்கும் தினங்களில் அமையக் கொடுப்பனவினை பெற்றுக்கொள்ளலாம். அமையக் கொடுப்பனவினைப் பெற்றுக் கொள்ளும் போது பிரயாணச் செலவினையும் அதற்கு சேர்த்துக் கொள்ளலாம். ஒரு மாதத்துக்கு அதிகபட்ச நாட்கள் இல்லை என்பதுடன் ஒரு பாடசாலைத் தவணையில் ஒரே பாடசாலைக்கு செல்வதற்காக ஒரு உத்தியோகத்தருக்கு ஒரு தடவையே கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்ளலாம். கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்ளும் போது கண்காணிப்பு அறிக்கையினை (இணைப்பு 6) சமர்ப்பிக்க வேண்டும்.

9. முன்னேற்ற மீளாய்வு :

நிரல் கல்வி அமைச்சு மட்டத்தில் - செயற்படுத்தல் குழு வருடத்துக்கு இரண்டு தடவை
மாகாண மட்டத்தில் - பாடசாலைத் தவணையொன்றில் ஒரு தடவை
வலய மட்டத்தில் - இரு மாதங்களுக்கு ஒரு தடவை
பாடசாலை மட்டத்தில் - மாதாந்தம் கூட்டம் நடத்தப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது
(இங்கு அறிக்கையைப் பேணி வர வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது)

இந்த மாகாண மற்றும் வலய மட்ட கூட்டங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவினை வழங்க வேண்டும்.

கவனிக்க வேண்டியது : மாவட்ட செயலாளர்களினால் நடத்தப்படுகின்ற மாதாந்த கூட்டத்துக்கு "கல்விக்காக உணவு நிகழ்ச்சித் திட்டம" தொடர்பாக பொறுப்பு வகிக்கின்ற வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் / உதவிக் கல்விப் பணிப்பாளர் பங்கேற்க வேண்டும். இக் கூட்டங்களில் சகல போஷாக்கு நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடல் மற்றும் தேவையான நடவடிக்கைகள் மேறகொள்ளல் போன்ற விடயங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

10. பாடசாலை மட்டத்தில் ஆவணங்களைப் பேணிவரல்:

(அ) மாணவ போஷாக்கு மட்டம் தொடர்பான அறிக்கை (இணைப்பு 8)
(ஆ) பாடசாலை மாதாந்த நிதி அறிக்கையின் பிரதிகள் (இணைப்பு 4) அல்லது உணவு வழங்குநர்களால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை (இணைப்பு C)
(,) உத்தியோகத்தர்களின் கண்கானிப்புக் குறிப்புப் புத்தகம் (இணைப்பு 6) இதற்கென தனியான புத்தகம் ஒன்றினை வைத்திருத்தல் வேண்டும்.

கல்விக்காக உணவு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக மேற்குறிப்பிட்ட ஆவணங்களுக்கு மேலதிகமாக தேசத்தைக் கட்டியெழுப்பல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள ஆவணங்களையும் பேணிவரல் வேண்டும்.

(இவ் அனைத்து ஆவணங்களையும் பரிபாலிப்பதற்காக CR புத்தகமொன்றினை பாவிப்பது சிறந்ததாகும் என்பதுடன் கடந்த வருடங்களில் பாவித்த புத்தகத்தையே இந்த வருடத்துக்கும் பயன்படுத்த வேண்டும்)

11. அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள்

வலய மட்டத்தில்

- கோட்டக் கல்வி பணிப்பாளர், அதிபர்கள் மற்றும் ஒரு பாடசாலையிலிருந்து ஒரு குழு அங்கத்தவர் ஆசிரியர் ஒருவருக்கு அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட வேண்டும். இதற்கென அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு வழங்கப்படல் வேண்டும்.
- உணவு வழங்குநர்களுக்கு ஒரு நாள் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் உணவு வழங்குதல் தொடர்பாக அறிவூட்டப்படல் வேண்டும். விரிவுரைக் கொடுப்பனவு மற்றும் உபகார செலவு மாத்திரம் பயன்படுத்தலாம்.

இந் நிகழ்சித் திட்டங்களை வலய சுகாதார முன்னேற்ற குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் சுகாதார துறை உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பினையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

12. காகிதாகிகள் பெற்றுக்கொள்ளல்

வருடத்துக்கு ஒரு பாடசாலைக்கு ரூபா. 400 ம், வலயக் கல்விக் காரியாலயம் ஒன்றுக்கு ரூபா. 3000 ம், மாகாணக் கல்விக் காரியாலயம் ஒன்றுக்கு ரூபா. 3000 உம் ஒதுக்கப்படுகின்றது.

13. நிதி முன்னேற்ற அறிக்கை சமர்ப்பித்தல்

ஒவ்வொரு மாதத்திலும் நிதி முன்னேற்ற அறிக்கை (இணைப்பு 4) அடுத்த மாதம் 5 ஆந் திகதிக்கு முன்னர் அதிபர் மூலமதாக வலயக் கல்விக் காரியாலயத்துக்கு வழங்கப்பட வேண்டும் என்பதுடன் வலயக் கல்விக் காரியாலயத்தின் மாதாந்த நிதி முன்னேற்ற அறிக்கை (இணைப்பு 9) அம்மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கும் கல்வி அமைச்சின் பாடசாலை சுகாதாரம் மற்றும் போஷாக்கு கிளைக்கும் வழங்கப்பட வேண்டும்.

14. முகாமைத்து உதவியாளர் / அபிவிருத்தி உதவியாளர் மற்றும் காரியால உதவியாளர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு

மாகாணக் கல்வித் திணைக்களங்கள் / வலயக் காரியாலயங்களில் இந்த செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற அபிவிருத்திப் பிரிவின் முகாமைத்துவ உதவியாளர்/ அபிவிருத்தி உதவியாளர்களுக்கு உறுதிச்சீட்டுக்கள் (Vouchers) மற்றும் கண்காணிப்பு அறிக்கைகள் தயாரிக்கின்ற நடவடிக்கைகளுக்காகவும் கணக்கு கிளையின் முகாமைத்துவ உதவியாளர்/ அபிவிருத்தி உதவியாளர்களுக்கு இந் நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக காசோலை மற்றும் கணக்கறிக்கை தயாரித்தல் நடவடிக்கைகளுக்காக மேலதிகநேரக் கொடுப்பனவு வழங்கப்பட முடியும். காரியால உதவியாளர்கள் இருவருக்கு மேலதிகநேரக் கொடுப்பனவு வழங்கப்பட முடியும்.

மாதாந்தம் நிதி அறிக்கையினை மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு மற்றும் நிரல் கல்வி அமைச்சுக்கு ஒவ்வொரு மாதமும் 15 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும்.

ஒரு உத்தியோகத்தருக்கு மேலதிகநேரக் கொடுப்பனவுக்காக மாதாந்தம் அதிகபட்சம் 10 மணித்தியாலங்களுக்கு மாத்திரமே வழங்கப்பட முடியும். இந்த உத்தியோகத்தர்கள் குறித்த செயற்பாடுகளில் ஈடுபட்டனர் என்பதனை கொடுப்பனவு வழங்கும் போது கணக்காளர்கள் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் / வலயக் கல்விப் பணிப்பாளர்களின் சிபாரிசு மற்றும் அங்கீகாரம் காணப்பட வேண்டும்.

15. இணைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்

- பாடசாலைகள் சுகாதார முன்னேற்றம் மற்றும் HIV/AIDS ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம்
- பாடசாலை வீட்டுதோட்டம் பயிரிடல் நிகழ்ச்சித்திட்டம் இதற்கு இணைப்பாக நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது

"பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கல்" என்ற இந்நிகழ்ச்சித் திட்டத்தினதும், தேசத்தைக் கட்டியெழுப்பல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசிதிகளை அபிவிருத்தி செய்வதற்கான அமைச்சினதும், உலக உணவுத் திட்டத்தினதும் ஒத்துழைப்புடன் செயற்படுத்துகின்ற கல்விக்காக உணவு நிகழ்ச்சித்

திட்டத்தினதும் உத்தேச இலக்குகளை அடைந்து கொள்வதற்காக மேற்குறிப்பிட்ட வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் இந் நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு கவனம் செலுத்தி ஆரோக்கியமான உற்சாகமான பிள்ளைப் பரம்பரையொன்றினை நாட்டுக்கு உரித்தாக்குவதற்கு தங்களது முழுமையான பங்கேற்பினை ஈடுபடுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எம்.எம்.என்.டி பன்டார
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள் : ஜனாதிபதி செயலாளர்
செயலாளர் – சுகாதரா பாதுகாப்பு மற்றும் போஷாக்கு அமைச்சு
செயலாளர் - தேசத்தைக் கட்டியெழுப்பல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான அமைச்சு
கணக்காயவாளர்
தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர்
தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம்
பரீட்சை ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
மாவட்ட செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்
பணிப்பாளர் உலக உணவு நிகழ்ச்சித்திட்டம்
கல்வி அமைச்சின் சகல பதவிநிலை உத்தியோகத்தர்கள்
கல்வி அமைச்சின் சகல பிரிவு தலைவர்கள்

## பாடசாலைப் பிள்ளைகளுக்கு உணவு வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்துக்கான அதிபரின் உடன்படிக்கை – 2010

கல்வி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பாடசாலைப் பிள்ளைகளுக்கு உணவு வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் ................................ மாகாண் .................... வலய .............................. கோட்ட ........................................ பாடசாலையில் கீழே குறிப்பிட்டுள்ள வகுப்பு மாணவர்களுக்கு கீழே குறிப்பிடப்படுகின்ற நிபந்தனைகளின் கீழ் உணவு வழங்கல் செயற்படுத்தப்படும் என உறுதிப்படுத்துகின்றேன்.

| தரம் | மாணவர்களின் எண்ணிக்கை (உணவு வழங்கப்படவுள்ள) |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| 9 | |
| 10 | |
| 11 | |
| 12 | |
| 13 | |

**நிபந்தனைகள் :**

1. ஒவ்வொரு தினமும் வழங்கப்படுகின்ற உணவுகளின் தரம் மற்றும் போதுமான அளவு தொடர்பாக உறுதிப்படுத்துகின்றேன்.
2. ஒவ்வொரு மாதத்திலும் செலவு விபரங்கள், குறித்த ஆவணங்கள் மற்றும் உறுதிச்சீட்டுக்களை அடுத்த மாதம் 5 ஆந் திகதிக்கு முன்னர் வலயக் கல்விக் காரியாலயத்துக்கு சமர்ப்பிப்பேன்.
3. நான்கு மாதத்துக்கு ஒரு தடவை உணவு வகைகளின் சுகாதார நிலைமை தொடர்பான அறிக்கையொன்றினை மக்கள் சுகாதார பரீட்சகரிடமிருந்து பெற்றுக்கொள்வதுடன் உணவு வழங்கல் தொடர்பாக பிரச்சினைகள் காணப்படின் அது தொடர்பாக வலயக் கல்விக் காரியாலயத்துக்கு அறிவிப்பேன்.
4. உணவு வழங்கல் தொடர்பான நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்பான எழுத்து மூலமான ஆவணங்களை உரிய முறையில் பேணி வரல்.

திகதி .............. ........................................ ...................................

அதிபரின் கையொப்பம்
(பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் /
பாடசாலை சுகாதார முன்னேற்றக் குழுவின் தலைவர்)

வலயக் கல்விப் பணிப்பாளரின்
கையொப்பம்

சாட்சிகள் : 1. ................................ (பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர்)

2. ........................................(பாடசாலை சுகாதார முன்னேற்றக் குழுவின் பொருளாளர்)

இணைப்பு 2.

பாடசாலைப் பிள்ளைகளுக்கு உணவு வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்துக்காக உணவு வழங்குநர்களின் உடன்படிக்கை – 2010

...................................................... வசிக்கின்ற .............................. ஆகிய நான், கல்வி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பாடசாலைப் பிள்ளைகளுக்கு காலை உணவு வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ...................... மாகாண .................... வலய .............................. கோட்ட ........................................ பாடசாலையின் ........... தரம் / தரங்களில் கல்வி பயில்கின்ற ....... (எண்ணிக்கை) மாணவர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் கீழ் குறித்த நேரத்திற்கு உணவு வழங்கல் தொடர்பாக செயற்படுவதற்கு ........................ பாடசாலையின் அதிபரின் முன்னலையில் உறுதியளிக்கின்றேன்.

நிபந்தனைகள் :

1. காலை 7.30 – 8.30 க்கிடையில் மாணவர்களுக்கு உணவு வழங்கல் மற்றும் விநியோகித்தல் செயற்பாடுகளில் ஒத்துழைத்தல்.
2. கொடுக்கப்பட்டுள்ள உணவுப் பட்டியலுக்கேற்ப உணவு வழங்கல்
3. உணவுகளின் சுத்தம் மற்றும் போஷாக்கு தொடர்பாக கவனமெடுத்தல்.
4. உரிய அளவுக்கு ஏற்ப உணவு வழங்கல்
5. சுகாதார பாதுகாப்புடன் உணவு தயாரித்தல்.

திகதி - ......................	..............................	..................................

சமூர்த்தி பெறுநரின் கையொப்பம்	அதிபரின் கையொப்பமும் பதவி முத்திரையும்

சாட்சிகள் 1. .........................../(ஆசிரியர் ஒருவர்) ..................................

2. ........................../(சமூர்த்தி அவிபிருத்தி உத்தியோகத்தர்)............ அல்லது

3. ........................../(பாடசாலை அபி. சங்க செயற்குழு உறுப்பினர் ஒருவர்)

..............................

**மக்கள் சுகாதார பரீட்சகரின் சிபார்சு**

உணவு வழங்குநரான ................................................. அவர்கள் உணவு வழங்குவதற்கு பயன்படுத்தப்படவுள்ள இடத்தைப் பரீட்சித்ததுடன் ................................. பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்குவதற்கு பொருத்தமானது எனவும் சிபார்சு செய்கின்றேன்.

..........................................

மக்கள் சுகாதார பரீட்சகர்

பதவி முத்திரை

**கோட்டக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சு**

..........................................................................................................................

..........................................................................................................................

...........................

கோட்டக் கல்விப் பணிப்பாளர்

பதவி முத்திரை

அங்கீகாரம் வழங்குகின்றேன்.

..................................

வலயக் கல்விப் பணிப்பாளர்

பதவி முத்திரை

பாடசாலை மாணவர்களுக்கான உணவு நிகழ்ச்சித்திட்டம் - 2010 – உணவுப் பட்டியல்

| முதலாம் வாரம் / மூன்றாம் வாரம் | | ஆரம்பப்பிரிவு. | இடைநிலை |
|---|---|---|---|
| 1 ஆம் நாள் | பயறு/கடலை/கௌபி (அவித்து) தேங்காயுடன்<br>கடலை கி. 75 (1/3 கோப்பை) .................<br>தேங்காய் ............................................<br>எண்ணெய் ........................................<br>பிரதேசத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உள் நாட்டு பழவகை ஒன்று | கி. 75 (1/2 கோப்பை)<br>கி. 15 (2 மே. கரண்டி)<br>கி. 03 (1/2 தேக் கரண்டி) | 1 கோப்பை<br>3 மே. கரண்டி<br><br>1 மே. கரண்டி |
| 2 ஆம் நாள் | மரக்கறி சோறு (கரட்,போன்சி,லீக்ஸ்)முட்டைக் கறியுடன்<br>அரசி (சம்பா) .................................<br>மரக்கறி .......................................<br>முட்டை .......................................<br>(கரட்,போன்சி,லீக்ஸ்)<br>பிரதேசத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உள் நாட்டு பழவகை ஒன்று | கி. 75 (1 கோப்பை)<br>கி. 10 (2 மேசைக் கரண்டி)<br>1/2 | 3 கோப்பை<br>4 மே. கரண்டி<br><br>1 |
| 3 ஆம் நாள | சோறு, கருவாடு/நெத்தோலி அவியலுடன் கீரைச் சுண்டல், பால் கறி<br>அரிசி (சிவப்பு) .........................<br>கருவாடு/நெத்தோலி சிறிய நெத்தோலி ......<br>பெரிய நெத்தோலி .......................<br>தேங்காய் (பால் கறிக்கு)<br>பிரதேசத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உள் நாட்டு பழவகை ஒன்று | கி.75 (1 1/4 கோப்பை)<br>கி. 10 (1 மே. கரண்டி)<br>கி. 06 (1 மே. கரண்டி)<br>கி. 20 (2 மே. கரண்டி)<br>கி. 25 (2 மே. கரண்டி) | 2 1/2 கோப்பை<br>2 மே. கரண்டி<br>2 மே. கரண்டி<br>4 மே. கரண்டி<br>4 மே. கரண்டி |
| 4 ஆம் நாள | சோறு முட்டை பால் கறி மற்றும் சலாது<br>அரிசி (சிவப்பு) .........................<br>முட்டை ..............................<br>சலாது ..............................<br>(கரட், பீட்ரூட், பீர்க்கங்காய்)<br>பிரதேசத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உள் நாட்டு பழவகை ஒன்று | கி. 75(1 1/4 கோப்பை)<br>½<br>கி. 30 (2 மே. கரண்டி) | 4 கோப்பை<br>1<br>4 மே. கரண்டி |
| 5 ஆம் நாள | மரக்கறி கலந்த ரொட்டி வெங்காய சம்பலுடன் குரக்கன் மா, கோதுமை மா<br>மரக்கறி .....................................<br>எண்ணெய் ............................<br>பிரதேசத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உள் நாட்டு பழவகை ஒன்று | கி.20 (2 மே. கரண்டி)<br>கி. 03 (1/2 தே. கரண்டி) | 4 மே. கரண்டி<br>1 தே. கரண்டி |

| இரண்டாம் வாரம் / நான்காம் வாரம் | | ஆரம்பப்பிரிவு | இடைநிலை |
|---|---|---|---|
| 1<br>ஆம்<br>நாள் | மஞ்கள் சோறு கிழங்கு பொரியல் பருப்புடன்<br>சம்பா அரிசி.................<br>பருப்பு ...........................................<br>கிழங்கு.........................................<br>பிரதேசத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உள் நாட்டு பழவகை ஒன்று | கி.75 (1 1/4 கோப்பை)<br>கி. 20 (2 மே. கரண்டி)<br>கி. 20 (1 மே. கரண்டி) | 2 1/2 கோப்பை<br>3 மே. கரண்டி<br>2 மே. கரண்டி |
| 2<br>ஆம்<br>நாள் | சோறு பருப்புடன் மரக்கறி சலாது<br>அரசி (சிவப்பு) ......................<br>பருப்பு ......................................<br>மரக்கறி ..........................................<br>(கரட்,பீட்ரூட், பீர்க்கங்காய்)<br>பிரதேசத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உள் நாட்டு பழவகை ஒன்று | கி. 75 (1 கோப்பை)<br>கி. 20 (2 மே. கரண்டி)<br>கி. 30 (3 மே. கரண்டி | 2 1/2 கோப்பை<br>3 மே. கரண்டி<br>3 மே. கரண்டி |
| 3<br>ஆம்<br>நாள | நூடில்ஸ் (மரக்கறி கலந்து), முட்டை பால் கறியுடன்<br>அரிசி மா நூடில்ஸ் ........................<br>மரக்கறி ..........................................<br>(கரட்,போன்சி,லீக்ஸ்)<br>2 கருவாடு துண்டுகள் அல்லது மீண்துண்டு 1<br>பிரதேசத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உள் நாட்டு பழவகை ஒன்று | கி.50 (1 கோப்பை)<br>கி. 30 (3 மே. கரண்டி)<br><br>2 கருவாடு துண்டுகள் அல்லது மீண்துண்டு 1 | 2 கோப்பை<br>5 மே. கரண்டி<br>3 கருவாடு துண்டுகள் அல்லது மீண்துண்டு 3 |
| 4<br>ஆம்<br>நாள | அவித்த வற்றாலை / மரவெள்ளிக்கிழங்கு / சேம்புக்கிழங்கு கிழங்கு<br>தேங்காய்<br>எண்ணெய் இட்ட கருவாடு அல்லது<br>பாற்சோறு/பயறு பாற்சோறுடன் மாசிகலந்த கட்டசம்பல்<br>பாற்சோறுக்கு<br>அரசி .............................................<br>தேங்காய் .......................................<br>பயறு பாற்சோறுக்கு<br>பயறு ..............................................<br>அரிசி .............................................<br>தேங்காய் ........................................<br>பிரதேசத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உள் நாட்டு பழவகை ஒன்று | 4 கோப்பை<br>கி. 10 (2 மே. கரண்டி)<br>கி. 30 (2 மே. கரண்டி)<br><br>கி.75 (1 1/4 கோப்பை)<br>கி. 50 (5 மே. கரண்டி)<br><br>கி.25 (1/2 கோப்பை)<br>கி.50 (1 கோப்பை)<br>கி.50 (5 கோப்பை) | 2 கோப்பை<br>4 மே. கரண்டி<br>4 மே. கரண்டி<br><br>2 1/2 கோப்பை<br>கி. 75 (7 1/2 மே. கரண்டி)<br>1/2 கோப்பை<br>2 கோப்பை<br>கி. 75 (7 1/2 மே. கரண்டி) |
| 5<br>ஆம்<br>நாள | அரிசி மா இடியப்பம், வெங்காய சம்பல், முட்டை, பால்கறியுடன் அல்லது சோறு, சோயா, கீரைச் சுண்டல், கரட், சலாதுடன்<br>அரசி (சிவப்பு) ......................<br>சோயா ......................................<br>கீரைவகைகளில் ஒன்று<br>கரட் .............................<br>தேங்காய் .........................<br>பிரதேசத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உள் நாட்டு பழவகை ஒன்று | கி.75 (1 1/4 கோப்பை)<br>கி. 10 (1 மே. கரண்டி)<br>கி. 20 (1 மே. கரண்டி)<br>கி. 10 (1 மே. கரண்டி)<br>கி. 5 (2 மே. கரண்டி) | 2 1/2 கோப்பை<br>2 மே. கரண்டி<br>2 மே. கரண்டி<br>2 மே. கரண்டி<br>4 மே. கரண்டி |

வேறு மாற்று உணவு வேளைகள்

1. உழுந்து பயறு தோசை அல்லது இட்லி பருப்பு மற்றும் மரக்கறி கலந்த சாம்பாருடன்
2. சோறு – பல மரக்கறிவகை கலந்த கறி
3. உது / தலப்பை – மீன் அல்லது கருவாடுடன்
4. உபுமா – பருப்பு அல்லது சோயா அவரை அல்லது காளானுடன்

இணைப்பு 4

பாடசாலைப் பிள்ளைகளுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் - 2010

பாடசாலையின் மாதாந்த நிதி முன்னேற்ற அறிக்கை

................................ மாதம்

.............................. வலயம்

அங்கீகரிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை ..........................
மாணவர் தொகையின் 95% ............................
(கிட்டிய முழு எண்ணிக்கைக்கு) –
செலுத்த வேண்டிய பணம் :
1. மொத்த மாணவர்களின் எண்ணிக்கை x ரூபா. 20/- ......
2. மொத்த மாணவர்களில் 95% x ரூபா. 20/- ......

பாடசாலையின் பெயர் ...................................

| திகதி | மாணவர்களின் எண்ணிக்கை | திகதிக்கு உரிய பணம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |
| 8 | | |
| 9 | | |
| 10 | | |
| 11 | | |
| 12 | | |
| 13 | | |
| 14 | | |
| 15 | | |
| 16 | | |
| 17 | | |
| 18 | | |
| 19 | | |
| 20 | | |
| 21 | | |
| 22 | | |
| 23 | | |
| 24 | | |
| 25 | | |
| 26 | | |
| 27 | | |
| 28 | | |
| 29 | | |
| 30 | | |
| 31 | | |
| | மொத்தம் | |

வழங்கப்பட்டுள்ள உணவுப் பட்டியலுக்கேற்ப உரிய முறையில் அனைத்து நாட்களிலும் உணவு வேளைகள் வழங்கப்பட்டதாகவும் அவை ஆவணப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இது அதற்கேற்ப தயார்செய்யப்பட்டுள்ளது எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.................................. ..........................
அதிபரின் கையொப்பம் திகதி

..............................
பாடசாலை அபிவிருத்திச் சங்க பொருளாலர்

இணைப்பு 5

# வழங்கப்படுகின்ற உணவு வேளைகள் தொடர்பான அறிக்கை - 2010

தரம்
பெயர் பட்டியலில் மாணவர்களின் எண்ணிக்கை
மாதம்

| திகதி | நாளாந்த வரவு | தினத்தில் குறித்த உணவு வழங்கப்பட்டதா? (ஆம் / இல்லை) | அவ்வாறில்லையாயின் வழங்கப்பட்ட உணவு வேளைகள் | காரணம் | தரம் (மகிழ்ச்சிரமானதா ) | போதுமான அளவு தொடர்பாக (ஆம் / இல்லை) | ஆசிரியரின் கையொப்பம் | மேற்பார்வையாளரின் பெயர் | மேற்பார்வையாளரின் குறிப்பு | கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |

பாடசாலைப் பிள்ளைகளுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் - 2010

அதிகாரிகளின் கண்காணிப்பு அறிக்கை

மாதம் - ..............................................

அதிகாரியின் பெயர் – ..............................

கல்வி வலயம் - ...............................

| திகதி | பாடசாலை | கண்கானிப்பும் மேற்பார்வையும் |
|---|---|---|
| | | |

அதிகாரியின் கையொப்பம் - ..........................

பதவி முத்திரை

இணைப்பு 7

பாடசாலை உணவு நிகழ்ச்சித்திட்டம் - 2010 வலயக் கண்காணிப்பு அறிக்கை

வலயம் ..............................................................

| திகதி | பாடசாலை | கண்காணிப்பு அதிகாரியின் | | மேற்பார்வையும் சிபாரிசும் |
|---|---|---|---|---|
| | | பெயர் | பதவி | |
| | | | | |

..................................................
கைபொப்பம் - பிரதிக் கல்விப் பணிப்பாளர்/
உதவிக் கல்விப் பணிப்பாளர் – போஷாக்கு

..........................................
கையொப்பம் - வலயக் கல்விப் பணிப்பாளர்

# மாணவர்களின் போஷாக்கு மட்டம் தொடர்பான அறிக்கை – 2010

பாடசாலையின் பெயர்: ……………………………………………………………………

தரம் : ………………………

| மாணவனின் பெயர் | வயது | முதலாம் தவணை | | | | இரண்டாம் தவணை | | | | மூன்றாம் தவணை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வரு. மாதம் | தவணையின் ஆரம்பம் | | தவணையின் இறுதி | | தவணையின் ஆரம்பம் | | தவணையின் இறுதி | | தவணையின் ஆரம்பம் | | தவணையின் இறுதி | |
| | | உயரம் (cm) | நிறை (Kg) | உயரம் (cm) | நிறை (Kg) | உயரம் (cm) | நிறை (Kg) | உயரம் (cm) | நிறை (Kg) | உயரம் (cm) | நிறை (Kg) | உயரம் (cm) | நிறை (Kg) |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |

இணைப்பு - 9

பாடசாலைப் பிள்ளைகளுக்கு உணவு வழங்கல் நிகழ்ச்சித்திட்டம் - 2009

மாதாந்த நிதி முன்னேற்ற அறிக்கை

வலயம் -

மாதம் -

| இலக்கம் | பாடசாலை | செலவு |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | மொத்தம் | |

மேலே உள்ள விடயங்கள் உண்மை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன்

........................... ................................ .................

பி.க.ப./ உ.க.ப (போஷாக்கு) வலயக் கல்விப் பணிப்பாளர் வலயக் கணக்காளர்

MSR/FFE – 1

№ 24865

WFP

தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு (M/NB&EID)
இலங்கை அரசு, ஐ.நா.உலக உணவுத்திட்டத்தின் அனுசரணையுடன் செயற்படுத்தும்
கல்விக்கான உணவு நிகழ்ச்சித் திட்டம் **(FFE)**

# மாதாந்த பாடசாலை அறிக்கை **(MSR)**

*இவ் அறிக்கையானது அறிக்கை செய்யப்படும் மாதத்தை தொடர்ந்து வரும் 3ஆம் திகதியில் கோட்ட / வலய கல்வி பணிப்பாளரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்*

| அ. பாடசாலை விபரம் | | | |
|---|---|---|---|
| பாடசாலையின் பெயர்: | | பாடசாலையின் அடையாள(மதிப்பீட்டு) இலக்கம்: | |
| கோட்டம்: | | மாதமும் ஆண்டும்: | |

## ஆ. நாளாந்த உணவு விநியோகம் - வரவுப் பதிவேடு (அனைத்துப் பாடசாலை நாட்களிலும் வரவு பதியப்படவேண்டும்)

| திகதி | பாடசாலை நாளா? ஆம்/இல்லை | உணவு வழங்கப் பட்டதா? (ஆம்/இல்லை) | மாணவா் வரவு (1-9 வகுப்பு வரை) | | | பயன்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களின் அளவு **(kg)** | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஆண் | பெண் | மொத்தம் | அரிசி | பருப்பு | சீனி | எண்ணெய் | ஏனையவை | | உணவு வழங்கப்படா மைக்கான காரணம் |
| 1 | | | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | | | |
| 4 | | | | | | | | | | | | |
| 5 | | | | | | | | | | | | |
| 6 | | | | | | | | | | | | |
| 7 | | | | | | | | | | | | |
| 8 | | | | | | | | | | | | |
| 9 | | | | | | | | | | | | |
| 10 | | | | | | | | | | | | |
| 11 | | | | | | | | | | | | |
| 12 | | | | | | | | | | | | |
| 13 | | | | | | | | | | | | |
| 14 | | | | | | | | | | | | |
| 15 | | | | | | | | | | | | |
| 16 | | | | | | | | | | | | |
| 17 | | | | | | | | | | | | |
| 18 | | | | | | | | | | | | |
| 19 | | | | | | | | | | | | |
| 20 | | | | | | | | | | | | |
| 21 | | | | | | | | | | | | |
| 22 | | | | | | | | | | | | |
| 23 | | | | | | | | | | | | |
| 24 | | | | | | | | | | | | |
| 25 | | | | | | | | | | | | |
| 26 | | | | | | | | | | | | |
| 27 | | | | | | | | | | | | |
| 28 | | | | | | | | | | | | |
| 29 | | | | | | | | | | | | |
| 30 | | | | | | | | | | | | |
| 31 | | | | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | | | | |

குறிப்பு: உணவு வழங்கப்படாமைக்கான காரணத்தை பின்வரும் குறியீடுகளைப் பயன்படுத்தி விளக்கவும்
உணவு பொருள் இருப்பு இன்மை:- **F** எரிபொருள் பற்றாக்குறை (விறகு) :- **FW** தொண்டர்கள் வரவின்மை:- **V**
நீர்ப் பற்றாக்குறை:- **W** ஏனையவை :- **O** வேறு ஏதும் காரணம் இருப்பின் விளக்கவும்

## இ. 10 ஆம் வகுப்புக்குமேல் உணவு விநியோகம் நடைபெற்றதா? ஆம் இல்லை

| | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| ஆம் எனின் | | | |

## ஈ. இம்மாதத்தில் பதியப்பட்ட மாணவா் தொகையில் ஏற்பட்ட மாற்றம்

| | வகுப்பு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| மாணவர் தொகையில் மாற்றம் ஏற்பட்டிருப்பின் மாத்திரம் விபரங்களைத் தருக | 1-9 ஆம் வகுப்புவரை | | | |
| | 10 ஆம் வகுப்புக்குமேல் | | | |

## உ. FFE தொண்டர்களுக்கான உணவு விநியோகப் பதிவேடு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இம்மாதத்தில் உணவு வழங்கப்பட்ட நாட்களின் எண்ணிக்கை **(P)** | | FFE தொண்டர்களின் எண்ணிக்கை **(Q)** | | ஆ | |
| | | | | பெ | |

MSR/FFE - 1 № 11449

**ஊ. இம்மாதத்தில் பெறப்பட்ட / பயன்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களின் விபரங்கள் (kg)**

| | | அரிசி | பருப்பு | சீனி | எண்ணெய் | ஏனையவை | |
|---|---|---|---|---|---|---|---|
| ஆரம்ப இருப்பு | (அ) | | | | | | |
| இம்மாதத்தில் வழங்குதலுக்கு புதிதாக கிடைத்தவை | (ஆ) | | | | | | |
| மாணவர்களிற்கான உணவு வழங்கல் | (இ) | | | | | | |
| FFE தொண்டர்களுக்கான உணவு வழங்கல்* | (ஈ) | | | | [redacted] | | |
| பழுதடைவுகள் | (உ) | | | | | | |
| இழப்பீடுகள் | (ஊ) | | | | | | |
| இறுதி இருப்பு (அ+ஆ) − (இ+ஈ+உ+ஊ) | | | | | | | |

* தொண்டர்களின் வரவுப் புத்தகத்தின் படி (1 FFE தொண்டருக்கான உணவுப் பொதி - அரிசி = 2.5* P*Q, பருப்பு = 0.30*P*Q, சீனி = 0.15*P*Q)

பழுதடைவுகள் / இழப்பீடுகளுக்கான ஏற்பட்டிருப்பின் காரணங்களைக் குறிப்பிடுக

| பழுதடைவுகள் | இழப்பீடுகள் |
|---|---|
| | |

**எ. M/NB&EID இனால் வழங்கப்பட்ட பச்சை மரக்கறிக்கான (Greenery) நிதிப் பயன்பாட்டின் சுருக்கம்**

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆரம்ப காசு மீதி (+) / கடந்த மாதத்திற்கான செலுத்தப்படாத செலவு மீதி(-) | (அ) | ருபா. | |
| | குறிக்கப்பட்ட மாதத்தில் கிடைக்கப்பட்ட தொகை | (ஆ) | ருபா. | |
| | குறிக்கப்பட்ட மாதத்திற்கான பச்சை மரக்கறிக்கான செலவுகள் | (இ) | ருபா. | |
| | காசு மீதி (மாத இறுதியில்) | (அ + ஆ - இ) | ருபா. | |

**ஏ. கண்காணிப்புக்காக இம்மாதம் பாடசாலைக்கு வருகை தந்த அதிகாரிகளின் விபரம் :**

| பெயர் | நிறுவனம் | திகதி | அதிகாரியின் விதந்துரை |
|---|---|---|---|
| | | | |
| பிரச்சினைகள் இருப்பின் முக்கியமான பிரச்சினைகள் | எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் | நடவடிக்கை எடுக்கப்படாவிடின் காரணம் | கோ.க.அ / வ.க.அ./**WFP** இன் பரிந்துரைக்காக |
| | | | |

**ஐ. அறிக்கையை தயாரிப்பவர்**

அதிபரின் பெயர்: ____________________

ஆலோசனைகள்:

____________________

கையொப்பமும் திகதியும் :

பா.அ.குழு (SDS) பிரதிநிதியின் பெயர்: ____________________

ஆலோசனைகள்: ____________________

____________________

கையொப்பமும் திகதியும் :

**ஒ. அபிவிருத்தி உதவியாளரால் / சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரால் கோட்ட / வலய மட்டத்தில் நிரப்பப்பட வேண்டியவை:**

| பிரச்சினைகள் இருப்பின் முக்கியமான பிரச்சினைகள் | எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் | நடவடிக்கை எடுக்கப்படாவிடின் காரணம் | கோ.க.அ / வ.க.அ./**WFP** இன் பரிந்துரைக்காக |
|---|---|---|---|
| | | | |

அபிவிருத்தி .உதவியாளரின் /சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரின் பெயரும் / கையொப்பம்: திகதி:-

**ஓ. பரிசீலித்து உறுதிப்படுத்தல்**

கோட்டக் கல்வி பணிப்பாளரின் பெயர்: ____________________

கோட்டக் கல்வி பணிப்பாளரின் விதந்துரைகளும், ஆலோசனைகளும்:- ____________________

____________________

____________________

____________________

கையொப்பமும் திகதியும்: ____________________ இறப்பர் முத்திரை:

இணைப்பு B

தேசத்தைக் கட்டியெழுப்பல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்கான அமைச்சு மற்றும் உலக உணவு வேலைத்திட்டத்தின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கல்விக்காக உணவு நிகழ்ச்சித்திட்ட பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கான மாதரிப்படிவம்.

பாடசாலையின் பெயர் : .............................. கல்வி வலயம் ....................

மாதம் : ...............................

| திகதி | தரங்களுக்கு ஏற்ப வரவு | | | | | | | | | (தரம் 1-9) வரவின் மொத்தம் | மேலதிக உணவுக்கான செலவு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | | |
| 1 | | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | | |
| 4 | | | | | | | | | | | |
| 5 | | | | | | | | | | | |
| 6 | | | | | | | | | | | |
| 7 | | | | | | | | | | | |
| 8 | | | | | | | | | | | |
| 9 | | | | | | | | | | | |
| 10 | | | | | | | | | | | |
| 11 | | | | | | | | | | | |
| 12 | | | | | | | | | | | |
| 13 | | | | | | | | | | | |
| 14 | | | | | | | | | | | |
| 15 | | | | | | | | | | | |
| 16 | | | | | | | | | | | |
| 17 | | | | | | | | | | | |
| 18 | | | | | | | | | | | |
| 19 | | | | | | | | | | | |
| 20 | | | | | | | | | | | |
| 21 | | | | | | | | | | | |
| 22 | | | | | | | | | | | |
| 23 | | | | | | | | | | | |
| 24 | | | | | | | | | | | |
| 25 | | | | | | | | | | | |
| 26 | | | | | | | | | | | |
| 27 | | | | | | | | | | | |
| 28 | | | | | | | | | | | |
| 29 | | | | | | | | | | | |
| 30 | | | | | | | | | | | |
| 31 | | | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | | | |

வழங்கப்பட்டுள்ள உணவுப் பட்டியலுக்கேற்ப உரிய முறையில் அனைத்து நாட்களிலும் உணவு வேளைகள் வழங்கப்பட்டதாகவும் அவை ஆவணப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இது அதற்கேற்ப தயார்செய்யப்பட்டுள்ளது எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

................................. ..........................

அதிபரின் கையொப்பம் திகதி

...............................

பாடசாலை அபிவிருத்திச் சங்க பொருளாலர் மற்றும் பதவி முத்திரை

இணைப்பு C

தேசத்தைக் கட்டியெழுப்பல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்கான அமைச்சு மற்றும் உலக உணவு வேலைத்திட்டத்தின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கல்விக்காக உணவு நிகழ்ச்சித்திட்டம்

வலயத்தின் பெயர் ..................................... மாதம் .................

| பாடசாலையின் பெயர் | கொடுப்பனவுக்கு உரித்தான மொத்த மாணவர்கள் (தரம் 1-9) | செலுத்தப்பட்ட பணம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| மொத்தம் | | |

மேலே உள்ள விடயங்கள் உண்மை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன்

........................... ................................. .................

பி.க.ப./ உ.க.ப (போஷாக்கு) வலயக் கல்விப் பணிப்பாளர் வலயக் கணக்காளர்